## ‘வாலிபப் பெரியார்’

# ஏ.வி.பி,. ஆசைத்தம்பி 100-வது பிறந்த நாள்!

கழகம் போட்டியிட்ட முதல் தேர்தலில் சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். பின்னர் நாடாளுமன்ற உறுப்பினராகவும் ஆனவர், பின்னாளில் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அரும்பணி ஆற்றியவர், ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்கள்!

தந்தை பெரியார் அவர்களுடைய உணர்வை தன்னுடைய சொற்பொழிவுகளிலே அப்படியே பிரதிபலிக்கின்ற ஒரு பேராற்றல் இருந்த காரணத்தாலே வயதில் இளைஞராக இருந்தாலுங்கூட இவரை ‘வாலிபப் பெரியார்’ என்று கழகத்தினர் அன்போடு அழைப்பார்கள்.

**“தன்மான இயக்கத்தின் தளபதிகளில் ஒருவர்;**
**தி.மு.கழகத்தின் வலிமைமிக்க தூண்;**
**நிலைகுலையாத கொள்கை நெஞ்சம் கொண்டவர்;**
**அய்யாவின் தொண்டர்;**
**அண்ணாவின் அருமைத் தம்பி!**
**எனக்கு உற்ற தோழர்!**
**கழகத்தின் கருவூலம்,**
**தன்மான இயக்கத்தின் சிங்கம்,**
**நண்பர் ஏ.வி.பி.ஆசைத்தம்பி நாவசைந்தால் நாடதிர வேங்கையின் முழக்கமன்றோ கேட்கும்!” -**

என்று, தன்னோடு இணைந்து கழகம் வளர்க்க உழைத்த ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்கள் மறைந்தபோது, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் துயரம் நனைந்து இரங்கல் தெரிவித்தார்கள்.

கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள தன்னுடைய துணைவியாருடன் அந்தமான் சென்ற போது, தலையில் இரத்தக் குழாய் வெடித்ததில் 7.4.1979 அன்று ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்கள் உயிரிழந்தார்கள்.



24.09.1924 - 07.04.1979

ஆசைத்தம்பியைப் பற்றி இனமானப் பேராசிரியர் அவர்கள், “ஆசைத்தம்பியைப் போல, இன்னொருவரை ஈடாகச் சொல்ல முடியாது” என்று குறிப்பிடுவார்கள்.

இத்தகு பெருமைக்குரிய “வாலிபப் பெரியார்” ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்களுக்கு நேற்று (24.9.2023) 100வது பிறந்த நாள் ஆகும்.

‘ஆசைத்தம்பி’களின் தியாகத்தால் வளர்ந்த தன்றோ நமது கழகம்!

ஏ.வி.பி.அவர்களின் 100வது பிறந்த நாளில்,

அவர்கள் கழகத்திற்குச் சிந்திய பேருழைப்பைப் போற்றுவோம்!

அவர்கள் அடியொற்றிக் கழகம் காத்திடச் சூளுரைப்போம்!

## “நின் புகழ் நீடு வாழ்க !”

---

பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமனின்

# திருவள்ளுவர் கலைஞர் திருவந்தாதி நூல்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வெளியிடுகிறார்!

சென்னை, செப்.25

சென்னை ஒய்.எம்.சி.ஏ. பட்டிமன்றம் சார்பில் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமனின் திருவள்ளுவர் கலைஞர் திருவந்தாதி நூல் வெளியீட்டு விழா நாளை (26.9.2023) மாலை 6.00 மணியளவில் எசுபிளனேடு ஒய்.எம்.சி.ஏ. அரங்கத்தில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் கலந்துகொண்டு நூலினை வெளியிடுகிறார்.

சென்னை பார்க் பிளாசா உரிமையாளர் கே.பி.நவநீத கிருஷ்ணன் நூலினை பெற்றுக்கொள்கிறார்.

முனைவர் ந.அருள், தமிழ் மாமணி வா.மு.சே. திருவள்ளுவர், முனைவர் வா.மு.சே. ஆண்டவர் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

முனைவர் ப.தாமரை க்கண்ணன் நூல் திறனாய்வு உரையாற்றுகிறார்.

உலக பன்னாட்டு தமிழுறவு மன்ற அமைப்பாளர் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் ஏற்புரையாற்றுகிறார்.

விழாவில் தலைவர் ஔவை. அருள் நடராஜன், செயலாளர் ப.தாமரைக் கண்ணன், இணைச்செயலாளர் பு.சீ.கிருட்டிணமூர்த்தி, ஒய்.எம்.சி.ஏ. பட்டிமன்ற தலைவர் டாக்டர் பெஞ்சமின் பிராங்கிளின், பொதுச்செயலாளர் பா.ஆசீர் பாண்டியன், சென்னை ஒய்.எம்.சி.ஏ. கிளைத் தலைவர் சே.க.அன்பு, செயலாளர் ஆ.டென்னிஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொள்கின்றனர்.

ஒய்.எம்.சி.ஏ. பட்டிமன்ற இணைச் செயலாளர் பு.சீ. கிருட்டிணமூர்த்தி நன்றி கூறுகிறார்.

---

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி

# புதிய உறுப்பினர் அட்டை வழங்குதல் பயிற்சிப் பாசறைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!



கழகத் தலைவர் -தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின்படி சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளுக்கு இளைஞர் அணி புதிய உறுப்பினர் அட்டை வழங்கும் விழா நடைபெறுகிறது. இளைஞர் அணி புதிய உறுப்பினர் அட்டை வழங்குதல் மற்றும் பயிற்சி பாசறை கூட்டத்திற்கு தலைமைக் கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, ஆயிரம்விளக்கு சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன், பகுதிக் கழக செயலாளர்கள்.மா.பா.அன்புதுரை, வினோத் வேலாயுதம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். இவ்விழாவிற்கு சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ப.பிரகாஷ், துணை அமைப்பாளர்கள் ஜே.எம்.எச்.இம்ரான், என்.மோகனவேல், கே.குட்டி (எ) சுப்பிரமணி, ப. பாலசந்தர், வி.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். விழாவில் ஆயிரம்விளக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வட்டசெயலாளர்கள், பகுதி/வட்டக் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள். இளைஞர் அணி உறுப்பினர் அட்டை வழங்கும் விழா கீழ்க்கண்ட தேதிகளில் நடைபெறும்.

26.9.2023 - செவ்வாய்கிழமை மாலை 5 மணி, டி.யு.சி.எஸ். வளாகம், அண்ணாசாலை, தேனாம்பேட்டை, ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி

27.09.2023 புதன்கிழமை மாலை 5மணி, சின்னமணி வள்ளியம்மாள் திருமண மண்டபம்,20, கங்கையம்மன் கோயில், 2-வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094 ஆயிரம்விளக்கு மேற்கு பகுதி

**நே.சிற்றரசு,**

செயலாளர் - சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

---




சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க. நகர் வடக்கு பகுதியில் பெரம்பூர் ஆர்.மகேஷ் தலைமையில் பகுதி செயலாளர் செ.தமிழ்வேந்தன் முன்னிலையில் மாவட்ட கழக செயலாளர் இந்து சமய அறநிலையத் துறை மற்றும் பெருநகர வளர்ச்சிகுழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, இரா.கிரிராஜன் ஆகியோர் சாலையோர வியாபாரிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினர். உடன் மேயர் பிரியா,கலாநிதி வீராசாமி எம். பி., சரிதாமகேஷ்குமார், மற்றும் கழக தோழர்கள் கலந்துகொண்டனர்.

---

# மகளிர் மசோதா எனும் வஞ்சகத் திட்டம்!

முதல்வர் உரை... 3-ஆம் பக்கத் தொடர்ச்சி

அ.தி.மு.க முன்னாள் அமைச்சர்கள் ஒன்றிய அமைச்சர்களை திடீர் என்று சந்தித்தார்களே? சென்னையில் இருந்து சென்றால் தெரிந்துவிடும் என்று, கொச்சியில் இருந்து சென்ற மர்ம சந்திப்புகளுக்குப் பின்னால் இருக்கும் அரசியல் என்ன? ஆட்சியில் இருந்தபோது மாநிலத்தின் நன்மைக்காக ஒன்றிய பா.ஜ.க. அரசு மூலமாக, தமிழ்நாட்டுக்கு அ.தி.மு.க கொண்டு வந்த நன்மை என்ன? எதுவும் இல்லை.

**ஒரே நாடு - ஒரே தேர்தலை ஆதரிக்கும் - பல்லக்குத் தூக்கி பழனிச்சாமி!**

இந்த லட்சணத்தில் ஒரே நாடு ஒரே தேர்தலை குப்புற விழுந்து ஆதரிக்கிறார் பல்லக்குத் தூக்கி பழனிசாமி. நன்றாக இருக்கிறதல்லவா இந்தப் ’பல்லக்குத் தூக்கி பழனிசாமி’ பட்டம்? என்ன அருகதையில் தமிழ்நாட்டு மக்கள் தனக்கு வாக்களிப்பார்கள் என்று பழனிசாமி பகல் கனவு காண்கிறார்? பழனிசாமி அவர்களே! சட்டமன்றத்துக்கும் சேர்த்து தேர்தல் வந்தால், உங்கள் கட்சி இப்போது இருக்கும் நிலைமைக்கு உள்ளதும் போய்விடும், ஜாக்கிரதை!

**கொத்தடிமைக் கூட்டத்துக்கு - படுதோல்வியை பரிசாகத் தாருங்கள்!**

பா.ஜ.க.வின் பாசிசத் திட்டங்கள் எல்லாவற்றிகும் ஆட்சியில் இருந்த போது தலையாட்டிவிட்டு, இன்றைக்கு பா.ஜ.க.வை எதிர்க்கின்ற மாதிரி மக்களிடம் காட்டிக்கொண்டு, மறைமுகமாக பா.ஜ.க தலைவர்களைச் சந்தித்துக்கொண்டு இருக்கும் கொத்தடிமைக் கூட்டத்திற்குக் கடந்த நாடாளுமன்றத் தேர்தலைப் போலவே இந்தத் தேர்தலிலும் படுதோல்வியைப் பரிசாகத் தர வேண்டும்.

இதுவரை மக்களை ஏமாற்றிய பா.ஜ.க. - அ.தி.மு.க. இந்தத் தேர்தலில் மக்களால் தோற்கடிக்கப்பட இருக்கிறது. மக்களின் இந்தக் கோபத்தை நமக்கான வாக்குகளாக மாற்ற வேண்டிய கடமை வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்களான உங்களுக்கு இருக்கிறது.

**கழகத்திற்கு உழைத்தவர்களை - கழகம் ஒருபோதும் கைவிடாது!**

கட்சிக்காக உழையுங்கள்! மக்களுக்காக உழையுங்கள். அதற்கு உரிய பலன் உங்களைத் தேடி வரும்! இயக்கத்திற்காக இரவு பகல் பாராமல் உழைத்தவர்களுக்கு நல்ல எதிர்காலம் உண்டு. அவர்களை கழகம் எப்போதும் கைவிடாது.

இயக்கத்திற்காக ரத்த நாளங்களாக உழைக்கும் வாக்குச்சாவடி முகவர்களே! உங்களில் ஒருவனான இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் உங்களிடம் வேண்டுகோள் வைத்து உரையாற்றி இருக்கிறேன்.

அடுத்த முறை உங்களைச் சந்திக்கும்போது, நான் வெற்றிச் செய்தியைத்தான் கேட்க வேண்டும். அதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து உழைப்போம்! உழைப்போம்! உழைப்போம்!

நாற்பதும் நமதே! நாடும் நமதே!

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

“உடல் உறுப்புகள் கொடை கொடுப்போருக்கு அரசு மரியாதை!”

# மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணம் நம் முதலமைச்சர்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, செப். 25-

உடல் உறுப்புகளைக் கொடையாகக் கொடுப்போருக்கு, அரசு மரியாதை அளிக்கப்படும் என்று நமது ‘திராவிட மாடல்’ அரசின் முதலமைச்சர் அறிவித்திருப்பது மற்ற மாநிலங்களுக்கு முன்னு தாரணமானது & மாமனித நேயம் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பல விபத்துகள் காரணமாக மூளைச்சாவு அடைந்து உயிருக்குப் போராடும் நோயாளிகளின் முக்கிய உடல் உறுப்புகள் வாழும் மற்றவர்களுக்கு பயன்படுத்தப் பட்டு மற்ற மனிதர் வாழ்வில் ஒரு புதுயுகத்தை, புதுவாழ்வை ஏற்படுத்த உதவிடும் பெற்றோர்களை அரசும் நாமும் எப்போதும் பாராட்டி நன்றி கூறி வருகிறோம்.

அப்படித் திடீரென்று இத்தகைய நிலைக்குள்ளா கும் இளைஞர்கள் மற்றும் பலரது



உறுப்புகளை மறு பயன் மூலம் மனித வாழ்வுக்கு ஒரு புதுத் திருப்பம் ஏற்படுத்தப்படுவது உண்மையான தொண்டறம் ஆகும்!

அப்படி தங்களது உறுப்புக் கொடை மூலம் உண்மை மனிதநேயத்தின் உருவமாகும் அவர்களது இறுதி நிகழ்வு அரசு மரியாதையுடன் செய்யப்படும் என்று நமது திராவிட மாடல் அரசின், முதலமைச்சர் சமூக நீதிக்கான சரித்திர நாயகர் மானமிகு மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு, ஓர் எடுத்துக்காட்டான மாமனிதநேயமாகும்!

அரசு மரியாதை அத்தகையவர்களுக்கு என்பது, ஒரு புதுத் திருப்பமாகும்.

**மனித மாண்பைப் போற்றும் செயல்!**

தமிழ்நாட்டின் திராவிட மாடல் ஆட்சி என்பது, ஒரு தனித் தன்மையான, சாமான்யர்களை யும் சமூகத்தில் முக்கிய மாமனிதர்களாக மதித்து, அவர்களது தியாகத்தை, மனித மாண்பை, உயர்த்திடும் ஆட்சி என்பதை இதன் மூலம் உலகுக்கே சீரிய அறிவிப்பின் மூலம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

அரசு மரியாதையுடன் இறுதி நிகழ்வுகள் நடந்திருக்குமாயின் அக்குடும்பத்தின் பின் வரும் பல தலைமுறைகள், இதனை மறக்காது, மனித சமூகத்திற்குப் மேலும் பலவாறு தொண்டாற்றத் தூண்டும் வகையில், ஒரு நற்சான்றிதழினை அக்குடும்பத்தினருக்கு தமிழ்நாடு அரசு சார்பில் வழங்கப்படுதல் மேலும் அவர்களைப் பெருமைப்படுத்தி, நன்றி கூறும் அரிய செயலாக அமையும்! அரசும் மருத்துவத் துறையும் யோசிக்குமாக.

தந்தை பெரியார் கூறும் மானிடப் பற்றுக்கு இந்த உடல் உறுப்புக் கொடை சரியான எடுத்துக்காட்டு.

**இதர மாநிலங்களுக்கு முன்னுதாரணம்!**

ஜாதி, மதம், இனம், நாடு முதலிய பலவற்றையும் தாண்டி “மனிதம்“ என்பது தான் பொதுவாக அறிவியல் ரீதியானது; சமூக நலம் சார்ந்தது என்பதை விளக்குவதே, குருதிக் கொடை விழிக் கொடை மற்றும் உறுப்புக் கொடைகளின் உள் அமைதி கொண்டுள்ள தத்துவங்கள்.

நமது முதலமைச்சர் இதிலும், இந்தியாவின் இதர மாநிலங்களுக்கும் ஒரு புதுமையான வழியைச் சுட்டிக் காட்டியுள்ளார்!

தமிழ்நாடு, இப்போது பலருக்கும் கற்றிடம் வெற்றிடமல்ல. கற்றிடம் என்று பறைசாற்றுவோம்.

இவ்வாறு கி.வீரமணி அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

திருவள்ளூர் மாவட்டம் - பொன்னேரி - ஆரணி பகுதியில் எலுமிச்சம்பழச்சாறு அருந்தி ஒவ்வாமை!

# பொன்னேரி அரசு மருத்துவமனையில் 13 பேர் அனுமதி!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்!

திருவள்ளூர், செப்.25-

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், ஆரணி பகுதியில் வசிக்கும் 13 நபர்கள் நேற்று எலுமிச்சம்பழச்சாறு அருந்தியதால் உணவு ஒவ்வாமை ஏற்பட்டு, பொன்னேரி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதை தொடர்ந்து நேற்று அந்நபர்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் சந்தித்து பழக்கூடைகளை வழங்கி, நலம் விசாரித்து, அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

பொன்னேரி அரசு மருத்துவமனையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது :-

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்துக்குட்பட்ட ஆரணி என்ற கிராமத்தில் நேற்று 3 ஆண் குழந்தைகள் 4 பெண் குழந்தைகள் 2 ஆண்கள் 4 பெண்கள் என மொத்தம் 13 நபர்கள் சேர்ந்து எலுமிச்சை சாறு தயாரித்து ஒன்றாக அருந்தியதால் அவர்களுக்கு உணவு ஒவ்வாமை ஏற்பட்டு அதனால் நேற்று மாலை 4 மணிக்கு பொன்னேரி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். பொன்னேரி அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் அவர்களுக்கு தேவையான சிகிச்சைகளை அளித்ததன் அடிப்படையில் அனைவருமே தற்போது நன்றாக உள்ளனர். இன்று பிற்பகல் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

இந்த எலுமிச்சம் சாறு தயாரிப்பதில் பயன்படுத்திய ஐஸ்க்யூபுக்கு பதிலாக ஐஸ் பேக் என்று சொல்லக்கூடிய ஒத்தனம் தரக்கூடிய ஐஸ் பேக்கை தவறுதலாக பயன்படுத்தியதால் இந்த ஒவ்வாமை ஏற்பட்டிருப்பதாக சொல்லப்பட்டுள்ளது. இப்பொழுது அந்த 13 நபர்களும் நன்றாக உள்ளனர்.

நேற்று மாலை இந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த தகவல் கிடைத்தவுடன் சம்பந்தப்பட்ட மருத்துவரிடம் மாவட்ட நிர்வாகத்திடமும் தொடர்பு கொண்டு பேசினோம். பிரச்சனையின்றி நிலையாக இருப்பதாக தெரிவித்தனர். அதை தொடர்ந்து இன்று காலை நானும் சட்டமன்ற உறுப்பினர்களும் உள்ளாட்சி உள்ளாட்சி பிரதிநிதிகளும் நேரில் வந்து அந்த 13 அவர்களையும் நலம் விசாரித்து அளிக்கப்படும் சிகிச்சை குறித்து மருத்துவர்களிடம் கேட்டிருந்தோம். இதன் பிறகு சிகிச்சை முடிந்து வீட்டிற்கு அனுப்பப்படுவார்கள்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சுதர்சனம், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி. ஜெ.கோவிந்தராஜன், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர், மாவட்ட ஊராட்சித் தலைவர் / திட்டக் குழுத் தலைவர் திருமதி.கே.வி. ஜி. உமாமகேஸ்வரி, வில்லிவாக்கம் ஒன்றிய குழுத் தலைவர் திருமதி.ப.கிரிஜா, உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மருத்துவர்கள், செவிலியர்கள், பொதுமக்கள் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

---

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி

# பகுதி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கான நேர்காணல்!

## மாவட்ட அமைப்பாளர் துபாய் வி.ஆர்.விஜய் அறிவிப்பு!

சென்னை, செப்.25-

சென்னை மேற்கு மாவட்டக் கழகத்திற்குட்பட்ட அண்ணாநகர் வடக்கு, அண்ணாநகர் தெற்கு, ஆயிரம்விளக்கு கிழக்கு, ஆயிரம்விளக்கு மேற்கு, சேப்பாக்கம், திருவல்லிக்கேணி ஆகிய பகுதிகளுக்கு மாணவர் அணி பகுதி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பொறுப்புக்கு விண்ணபித்தவர்களுக்கான நேர்காணல் வரும் 26.09.2023 - செவ்வாய் கிழமை மாவட்டக் கழக அலுவலகம் அமைந்துள்ள நுங்கம்பாக்கம், எண்.20/32, காம்தார் நகர் முதல் தெருவில் நடைபெறவுள்ளது. பகுதி வாரியாக கீழ்க்கண்ட நேரப்படி நேர்காணல் நடைபெறும்.

அதன் விவரம் பின்வருமாறு:

26.09.2023 - அண்ணாநகர் வடக்கு - காலை 10.00 மணி - மாவட்டக் கழக அலுவலகம்

26.09.2023 - அண்ணாநகர் தெற்கு - காலை 11.00 மணி - மாவட்டக் கழக அலுவலகம்

26.09.2023 - ஆயிரம் விளக்கு கிழக்கு -நண்பகல் 12.00 மணி - மாவட்டக் கழக அலுவலகம்

26.09.2023 - ஆயிரம் விளக்கு மேற்கு - மாலை 3.00 மணி - மாவட்டக் கழக அலுவலகம்

26.09.2023 - சேப்பாக்கம் - மாலை 4.00 மணி - மாவட்டக் கழக அலுவலகம்

26.09.2023 - திருவல்லிக்கேணி- மாலை 5.00 மணி - மாவட்டக் கழக அலுவலகம்

இவ்வாறு சென்னை மேற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் துபாய் வி.ஆர்.விஜய் கூறியுள்ளார்.

---



பொதுசுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்து துறை சார்பாக திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், கொள்ளுமேடு அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் நேற்று (24.09.2023) வட்டார அளவிலான ஒருங்கிணைந்த காசநோய் பரிசோதனை மற்றும் சிகிச்சை மையம் தொடக்க விழாவில் 30 பயனாளிகளுக்கு தலா ரூ1.600 வீதம் மொத்தம் ரூ48.000 மதிப்பீட்டிலான காச நோய் மருந்து பெட்டகங்களையும் 30 கர்ப்பிணி பெண்களுக்கு தலா ரூ2,000 வீதம் மொத்தம் ரூ60.000 மதிப்பீட்டிலான ஊட்டச்சத்து பெட்டகங்களையும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ் முன்னிலையில் வழங்கினார்கள். உடன் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், சுகாதாரத்துறை அலுவலகர்கள், வில்லிவாக்கம் ஒன்றிய குழுத்தலைவர் திருமதி.ப.கிரிஜா. உள்ளாட்சி பிரதிநிதிகள். பொதுமக்கள் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் உள்ளனர்.